நாள் 13.08.2024

வழக்கு எண் எம் சி 27/2022

மசா1 - மருதாயி க/பெ. குமரேசன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை

நான் 12 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு வங்கிக் கணக்கு உள்ளது. நான் செல்போன் வைத்துள்ளேன். என் அப்பா விவசாயம் செய்து வருகிறார். நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள முகவரி என் பெற்றோரின் முகவரி. நான் தாக்கல் செய்துள்ள மனு ரசீதுகளை பொறுத்து அது தொடர்பாக புகாரையோ அதன் விசாரணை ஆவணங்களையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது திருமணத்தின்போது புகைப்படங்கள் எடுத்தார்கள். அந்த புகைப்படத்தில் நான் நகைகள் போட்ட புகைப்படமும் இருந்தது. அந்த புகைப்படங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் எரித்து விட்டார்கள். இந்த விபரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகைப்படங்களை அவ்வாறு எரிக்கவில்லை என்றும் நகை எதுவும் போடாததால் தான் புகைப்படம் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ரூ.60 ஆயிரம் வண்டி வாங்குவதற்காக கொடுத்ததாக சொல்லப்படுவது யாரிடம் எப்போது கொடுக்கப்பட்டது என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்., ஒருசில நாட்களிலேயே என்னை என் கணவர் அடித்தது தொடர்பாக புகார் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். எப்போது என்றால் 2018 ம் வருடம் கொடுத்தேன். அது சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் 2018 ம் ஆண்டு கொடுக்கப்பட்ட ஆவணங்கள் தான். என் அப்பா ரூ.50 ஆயிரம் தோட்டம் வைப்பதற்காக கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் விபரங்களை பொறுத்து எங்கு எப்போது யாரிடம் கொடுக்கப்பட்டது என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் நகைகளை அடகு வைத்ததை பொறுத்து எப்போது எந்த நகை கடை என்று சொல்லவில்லையா என்றால் நகைகளை அவர்கள் அடகு வைக்கவில்லை. அவர்களே தான் வைத்திருக்கிறார்கள். எனக்கு திருமணத்தின்போது போடப்பட்ட நகைகளை நானும் என் உறவினரும் வாங்கிச் சென்று விட்டோம் என்றால் சரியல்ல. என்னை அடித்து கீழே போட்டு என் அப்பா அழைத்துச் சென்றதாக சொல்லியுள்ளேனே அது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லையா என்றால் கொடுக்கவில்லை. மேற்படி நிகழ்வும் எந்த மாதம் எந்த வருடம் நடந்தது என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருதய அறுவை சிகிச்சை செய்தது சம்மந்தமான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வாறான உடல்நிலை குறைவு என் கணவரால் எந்த காலத்திலும் ஏற்படவில்லை என்றாலும் எனக்கு தானாக ஏற்பட்டது என்பதால் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தெரிந்து விடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் இருந்தது குறித்து எதிர்மனுதாரரிடம் தெரிவித்தபோது அவர் என்னை திட்டிய நிகழ்வுகள் எப்போது என்று கூறவில்லை என்றால் சரிதான். பூச்சி மருந்து குடித்து நான்

அனுமதிக்கப்பட்டது குறித்ததற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் நான் எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்பது குறித்து கூட சொல்லவில்லை என்றால் சரிதான். ராம்ஜிநகர் காவல்நிலையத்தில் காவலர்கள் என்னை கட்டாயப்படுத்தியது குறித்து போலிசார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு வெளியே வந்தவுடன் என்னை எதிர்மனுதாரர் மிரட்டியதாக சொல்லப்படும் நிகழ்வை குறித்து நான் உடனே காவல்நிலையத்திற்கு சென்று சொல்லவில்லை என்றும் அதன்பிறகு கூட ராம்ஜிநகர் காவல்நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். ஜீயபுரம் மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அது சம்மந்தமாக என் கணவரையும் அழைத்து விசாரணை செய்தார்கள். அந்த புகாரின் பேரில் போலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்ததையடுத்து தற்போது வரை கூட மீண்டும் விசாரணை செய்ய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். கோகிலா என்பவருடன் எப்போது திருமணம் நடந்தது, இருவரும் எங்கு கணவன் மனைவியாக வாழ்ந்து வருகிறார்கள், யார் மூலமாக திருமணமானது எனக்கு தெரிந்தது என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இது சம்மந்தமாக கொடுத்த புகாரில் மகளிர் காவல்நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வீட்டிற்கு சாமான் எடுக்க சென்றபோது என்னையும் எனது வழக்கறிஞரையும் மிரட்டியதாக சொல்லப்படுவது எப்போது நடந்தது என்று

சொல்லவில்லை என்றும் மற்றும் இது சம்மந்தமாக நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பிறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது குறித்து எப்போது யார் மூலமாக கிடைத்தது என்று நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த பிறப்பு சான்றுக்கும் எதிர்மனுதாரருக்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நிலம் வைத்துக் கொண்டு சம்பாதிக்கிறார் என்று நிரூபிப்பதற்காக எங்கு உள்ளது என்றோ எவ்வளவு உள்ளது என்றோ பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது கொடிய விச பாம்பு தாக்கி சிறுநீரகம் முழுமையாக பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனையில் சுமார்2 மாத காலம் அனுமதிக்கப்பட்டு அவரையே அவர் பார்த்துக் கொள்ள இயலாத நிலையில் இருந்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. தற்போது அவர் செய்து வந்த கூலி வேலைக்கு கூட செல்லமுடியாமல் மிகவும் ஆபத்தான நிலையில் வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் செய்ய பெண் பார்க்க சென்ற அன்றே என் மாமியார் 3 பவுன் செயினை எனக்கு போட்டார் என்றால் சரியல்ல. எனக்கு திருமணத்தின்போதே அன்றாடம் பெண்கள் பயன்படுத்தும் செயின் , தோடு எல்லாம் சேர்த்தே 5 பவுன் தான் போட்டார்கள் என்றால் சரியல்ல. திருமண செலவுகளை எதிர்மனுதாரர் தரப்பில் தான் செய்தார்கள் என்றால் சரியல்ல. 07.10.2017 ம் தேதி எனக்கு நெஞ்சு வலி வந்து பக்கத்தில் இருந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாரா என்றால் அழைத்துச் சென்றார். ஆனால் எனக்கு நெஞ்சுவலி எதுவும் இல்லை. அதன்பிறகு 19.10.2017 அன்று சோமரசம்பேட்டை விஜயா

கிளினிக்கிற்கு அழைத்துச் சென்றாரா என்றால் இல்லை. அதற்கு பிறகு எனக்கு வலி இருப்பதாக கூறி எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று சிறிது நாட்கள் இருந்து வருவதாக கூறி என் அப்பா அழைத்துச் சென்றார் என்றால் நானாகத்தான் சென்றேன். அதன்பிறகு என்னை எதிர்மனுதாரர் அழைத்து வரவந்தாரா என்றால் இல்லை. அதற்கு பிறகு பலமுறை என்னிடமும் என் தந்தையிடமும் பலமுறை போனில் பேசி என்னை சமாதானம் செய்து அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. 27.04.2018 ம் தேதி சென்னையிலிருந்து ஒரு செவிலியர் மருத்துவமனையிலிருந்து பேசுவதாகவும் தங்கள் மனைவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சென்னையில் ஆபரேசன் முடித்து விட்டு என் கணவர் வீட்டிற்கு வந்தேன் என்றால் சரிதான். என் கணவர் கேட்டபிறகு டிஸ்சார்ஜ் சம்மரியை கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது எனக்கு சம்மந்தப்பட்ட 01.05.2018 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரியின் ஜெராக்ஸ் நகல் தான். அது **எமசாஆ 1** ஆகும். அதற்கு பிறகு 2 முறை செக் அப்பிற்கு என்னுடன் என் கணவர் பரிசோதனைக்கு வந்தார் என்றால் சரியல்ல. திருமண செலவிற்காக என் தந்தைக்கு என் கணவர் ரூ.இரண்டரை லட்சம் தெரிந்தவர்களிடம் வட்டிக்கு கடன் வாங்கி கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. என் அப்பா வட்டியும் கொடுக்காமல் அசலும் கொடுக்காமல் இருந்ததால் பணம் கொடுத்தவர்கள் என் கணவரை பணம் கேட்டு மிகவும் தொந்தரவு செய்தார்கள் என்றும் அப்போது தான் என் கணவர் என்னிடமே சொன்னார் என்றால் சரியல்ல. நானும் பணம் தரமுடியாது என்று என் கணவரிடம் சண்டை போட்டேன்

என்றால் சரியல்ல. பணப் பிரச்சனையில் தான் நான் எலிமருந்து குடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. அதன்பிறகு என்னை அழைத்துச் சென்று மருத்துவமனையில் காட்டி என் கணவர் என்னை காப்பாற்றியிருக்கிறார் என்றால் சரியல்ல. அதன்பிறகு நான் என் தந்தை வீட்டிற்கு சென்றேன். அதற்கு பிறகு எங்கள் குடும்பத்திற்கும் என் கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு ராம்ஜிநகர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அப்போதும் இரண்டுபேரையும் சேர்த்து வைக்க போலிசார் பேசினார்கள் என்றால் சரிதான். இருவருமே உடன்படாததால் போலிசார் நீதிமன்றம் சென்று பார்த்துக் கொள்ளுமாறு அனுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு வாங்கிய கடனை என் அப்பா கொடுக்காததால் எதிர்மனுதாரர் பெயரில் இருந்த ஒரு ஏக்கர் நிலத்தையும் விற்று கடனை அடைத்தார் என்றால் சரியல்ல. அதன்பிறகு நான் ஜீயபுரம் மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அங்கு அவருடன் சேர்ந்து வாழ முடியாது என்றும் எனக்கு போட்ட நகைகளையும் சீர்வரிசை பொருட்களையும் தருமாறு கேட்டேன் என்றால் சரிதான். அப்போது என் கணவர் மனைவியோடு சேர்ந்து வாழ தான் ஆசைப்படுகிறேன் என்றும் அதனால் வரச்சொல்லுமாறு சொன்னார் என்றால் சரியல்ல. அதன்பிறகு திருச்சி நீதிமன்ற சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் ஒரு புகாரை கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் என் கணவரும் ஆஜராகி இருவரும் எதிர்மனுதாரர் ஊரிலேயே நடுத்தெருவில் வீடு எடுத்து தனியாக வாழ்ந்தோம் என்றால் சரியல்ல. இலவச சட்ட உதவி மையம் மூலமாக சமரசம் செய்யப்பட்ட பிறகு இருவரும் ஒருமாத காலம் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். எனக்கு முதுகில் கட்டி வந்ததால் ஏபி சி

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். அதற்கான மருத்துவ குறிப்புகளின் நகல் என்னிடம் காட்டப்படுவது தான். அது **எமசாஆ 2** ஆகும். எனக்கு இருதய அறுவை சிகிச்சை செய்ததால் உடம்பில் கத்தி வைக்க முடியாது என்று டாக்டர் சொன்னால் கட்டியே இல்லை என்று கூறிவிட்டார்கள். அதன்பிறகு என் அம்மா வீட்டிற்கு சென்று இருந்து வருவதாக சொல்லி சென்றேன் என்றால் சரிதான். அதன்பிறகு நான் என் கணவர் வீட்டிற்கு வந்தேனா என்றால் இல்லை. அங்கேயே இருந்து விட்டேன். என் கழுத்தில் தாலி இல்லாததால் என் கணவர் தாலி எங்கே என்று கேட்டு என்னிடம் சண்டை இட்டார் என்றால் சரியல்ல. ராம்ஜிநகர் காவல்நிலையத்தில் மாமனார் தாலியை வாங்கிச் சென்று விட்டதாக புகார் கொடுத்தேன். இந்த விபரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. என் அம்மா என் அண்ணன் குமார் என்பவரிடம் தாலியை கொடுத்து அடகு வைக்க சொல்லி இருப்பதாகவும் எதுவும் சத்தம் போடவேண்டாம் என்று சொல்லி அனுப்பினார் என்றால் சரியல்ல. அதன்பிறகு என்னுடைய 3 பவுன் மதிப்புள்ள நெக்லஸை என் கணவரிடமிருந்து வாங்கிச் சென்றேன் என்றால் சரியல்ல. மகாமுனி என்பவர் என் தாத்தா. பழனிவேல் என்பவர் என் தாய்மாமா. நான் நகைகளை வாங்கிச் சென்றபிறகு மகாமுனி, பழனிவேல் இருவரும் வந்து ஆளுக்கொரு மோதிரமாக வாங்கிச் சென்றார்கள் என்றால் சரியல்ல. அதன்பிறகும் 04.09.2019 அன்று ராணா மருத்துவமனை சென்று எனக்கு சிகிச்சை அளித்தாரா என்றால் இல்லை. இந்த காலகட்டத்தில் நாங்கள் இருவரும் கணவன் மனைவியாக சந்தோசமாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல. அப்போதும் என் பெற்றோர் தான்

வீட்டிற்கு வந்து பிரச்சனை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. இந்த பிரச்சனையால் என் கணவர் எலிமருந்து குடித்து திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல. அவர் 5 நாட்கள் உள்நோயாளியாக இருந்தார் என்றும் மருத்துவரும் என்னை அழைத்துப் பார்த்துக் கொள்ள சொன்னார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதன்பிறகு நான் சமூகநல அலுவலகத்தில் ஒரு புகார் கொடுத்தேன். அங்கும் நான் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று சொல்லிவிட்டேன். அந்த விசாரணையில் நானும் என் உறவினர்களும் நகைகளை வாங்கிக் கொண்டதாக என் கணவர் எழுதிக் கொடுத்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. என் சகோதரர்கள் மனோகர், பழனியாண்டி ஆகியோர் வயல்வேலைக்கு சென்ற எதிர்மனுதாரருடன் சண்டையிட்டு எதிர்மனுதாரருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக குழுமணி அரசு மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்றார் என்றாலும் இது சம்மந்தமாக சோமரசம்பேட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை அடித்து கொடுமைப்படுத்தினார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தற்போதும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவிருப்பமில்லை. எனக்கு சொந்தமான நகைகள் எதுவும் எதிர்மனுதாரரிடம் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் பெற்றோர் உயிருடன் இருக்கிறார்கள். அவர்களை அவர் தான் பார்த்துக் கொள்ளவேண்டும். எதிர்மனுதாரர் வேறொரு பெண்ணை திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. இலவச சட்ட உதவி மையத்தில் புகார் கொடுத்து ஒருமாதம் வரை கையொப்பமிட்டு கொடுத்த பிறகு என் தந்தை வீட்டிற்கு சென்ற பிறகு நான் மீண்டும் எதிர்மனுதாரர் வீட்டிற்கு வரவில்லை என்றால் சரிதான். எந்த காரணத்திற்காகவும் எதிர்மனுதாரர் என்னை புறக்கணிக்கவில்லை என்றும் நானாக தான் பெற்றோர் வீட்டில் வாழ்ந்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போதும் கூட அவருக்கு உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில் இருந்தும் நான் மருத்துவமனை சென்று பார்க்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. அவர் கூலி வேலை தான் பார்த்தார் என்றும் தற்போது விச பாம்பு கடித்ததால் எந்த வேலைக்கும் செல்லமுடியாமலும் அரை மணி நேரத்திற்கு மேல் ஒரு இடத்தில் நிற்க முடியாமல் சிரமப்பட்டு வருகிறார் என்றும் மனு நிலைக்கத் தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.